# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.49 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | ராஜரத்தினம் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 20th day of December 2019.

முதல் விசாரணை

நான் தற்பொழுது கோயமுத்தூர் இ.எஸ்.ஐ கார்ப்பரேஷன் பல்லடம் கிளையில் எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். 2011 ஆம் வருடம் பிப்ரவரி மாதத்திலிருந்து 2012 ஆம் வருடம் டிசம்பர் மாதம் வரை நான் கோயமுத்தூர் மேட்டுப்பாளையம் ரோட்டில் இயங்கி வரும் டி.வி.எஸ்.ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தில் பர்சனல் ஆபீசராக வேலை பார்த்து வந்தேன். 2012 ஆம்வருடம் பிப்ரவரி மாதத்தில் கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் முன்னால் அமைச்சர் திரு பொங்கலூர் பழனிசாமி அவர்கள் மேற்படி ஆட்டோ மொபைல் நிறுவனத்தில் கார் வாங்கிய விவரத்தை கடிதத்தின்வழி கேட்டார்கள். அது சம்மந்தமான விற்பனை பில்களை கோயமுத்தூர் அலுவலகத்தில் தேடிப்பார்த்தேன். அது அங்கு இல்லாததால் மதுரையில் உள்ள தலைமை அலுவலகத்தை தொடர்பு கொண்டு அங்கிருந்து பெற்று, கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன். திரு பொங்கலூர் பழனிசாமி அவர்களின் மனைவி திருமதி விஜயலட்சுமி அவர்கள் Fiat Uno அதன் பதிவு எண். டி.என்.37 – யூ 6162 என்ற காரை எங்கள் நிறுவனத்திலிருந்து வாங்கியுள்ளார்கள். மேற்படி கார் ரூ.4,06,179/-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேற்படி விற்பனை தொகையில் ரொக்கமாக செலுத்தப்பட்ட தொகைரூ.1,06,179/- ஆகும். மீதி ரூ.3 லட்சம் ரூபாய் சுந்தரம் பைனான்ஸில் கடன் பெறப்பட்டு செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி

விவரங்களை விற்பனை ரசீது மூலம் நான் தெரிந்து கொண்டேன்.அந்த விற்பனை ரசீதை நான் கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன். காண்பிக்கப்படும் விற்பனை ரசீது என்னால் கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்டதாகும். அது அ.த.சா.ஆ.94 ஆகும். இது சம்மந்தமாக கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

கூடுதல் காவல் கண்காணிப்பாளர் டி.வி.எஸ். ஆட்டோ மொபைலின் நிறுவன மேலாளருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தை அ.த.சா.ஆ.**94** உடன் இணைத்து கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தேனா என்றால் அவ்வாறு கொடுக்கவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எங்கள் நிறுவனத்திற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தை நான் நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை என்றால் சரிதான். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அனுப்பியதாகச் சொல்லும் கடிதத்தை நான் ஞாபகத்தின் அடிப்படையில் சொல்கிறேனா என்றால் ஆம். டி.வி.எஸ். நிறுவனத்தின் மேலாளர் எந்த தேதியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அனுப்பிய கடிதத்திற்கு பதில் அனுப்பினார் என்றால் பதில் அனுப்பவில்லை. அ.த.சா.ஆ.**94** விற்பனை பட்டியலை மட்டும் என் மூலம் கொடுத்து அனுப்பினார். அ.த.சா.ஆ.**94** விற்பனை பட்டியலை நான் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்தேன். அவ்வாறு நான் அ.த.சா.ஆ.**94** ஆவணத்தை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்ததற்கு ஒப்புகை சீட்டு எதுவும் பெறவில்லை. அ.த.சா.ஆ.**94** ல் நான் கையொப்பம் செய்து கொடுத்திருக்கிறேன். கூடுதல் காவல் கண்காணிப்பாளரின் வேண்டுகோள் கடிதத்திற்கு எங்கள் ஆட்டோ மொபைல் நிறுவனத்தின் மேலாளர் பதில் எதுவும் அனுப்பவில்லை. எங்களது நிறுவனத்தின் மேலாளர் எனக்கு கடிதம் ஏதும் கொடுத்து அனுப்பவில்லை. வாய்மொழியாகத்தான் சொன்னார். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எங்கள் நிறுவனத்திற்கு அனுப்பியிருந்த கடிதத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் நான் தற்பொழுது அந்த ஆட்டோ மொபைல் நிறுவனத்தில் வேலை பார்த்து வரவில்லை. ஆதலால் என்னால் இயலாது. அ.த.சா.ஆ.**94** ஆவணத்தில் ரூ.**4,06,179/-** என்ற தொகை வாகனத்தின் பதிவுக் கட்டணமும் உள்ளடக்கியதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அ.த.சா.ஆ.**94** ல் வாகனத்தின் பதிவு எண்.டி.என்.**37** யூ **6162** என்பது எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விற்பனை

பட்டியலில் பதிவு எண் வராது. எந்த அடிப்படையில் நான் தற்பொழுது பதிவு எண்ணை சொல்கிறேன் என்றால் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தில் ஒருவேளை பதிவு எண்ணை குறிப்பிட்டு இருக்கலாம். அதன் அடிப்படையில் நான் சொல்கிறேன். நான் இன்றைய தினம் சாட்சியம் அளிப்பது தொடர்பான வாகனத்தின் ஆவணம் எதையும் கொண்டுவரவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கும் போது அ.த.சா.ஆ.**94** விற்பனை பட்டியலின் அடிப்படையில்தான் வாக்கு மூலம் கொடுத்தேன்.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/ராஜரத்தினம்

## <u>**DEPOSITION OF WITNESS**</u>

## (Chapter XXII Code of Criminal Procedure)

### கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.50 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | டேவிட் ஜோசப் பால்ராஜ் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 20th day of December 2019.

**(அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்ட CMP.No.3910/2019, 12.11.2019 ஆம் தேதி அன்று இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.)**

முதல் விசாரணை

நான் தற்பொழுது சென்னையில் பாரதி ஏர்டெல் நிறுவனத்தில் நோடல் ஆபீசராக பணிபுரிந்து வருகிறேன். 2012 ஆம் வருடத்திலும் நான் பாரதி ஏர்டெல் நிறுவனத்தில் நோடல் ஆபீசராகத்தான் பணி புரிந்து வந்தேன். இவ்வழக்கில் சாட்சியப்பட்டியலில் 47 வது சாட்சியாக காண்பிக்கப்பட்டுள்ள திரு ஜான்சன் என்பவர் பாரதி ஏர்டெல் நிறுவனத்தில் 2007 ஆம் வருடத்திலிருந்து நோடல் ஆபீசராக பணிபுரிந்து வந்து 2015 ஆம் வருடம் தனது பணியை விட்டுச் சென்று விட்டார். அவர் தற்பொழுது எங்கு பணிபுரிந்து வருகிறார், எங்கு வசித்து வருகிறார் என்ற விவரம் எங்களுக்குத் தெரியவில்லை. இந்த வழக்கில் நான் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்க பாரதி ஏர்டெல் நிறுவனம் எனக்கு அதிகாரம் அளித்து கடிதம் கொடுத்துள்ளார்கள். அந்த அதிகாரக் கடிதத்தின் சான்றிட்ட நகல் அ.த.சா.ஆ.95 ஆகும். 30.1.2012 ஆம் தேதி கூடுதல் காவல் கண்காணிப்பாளர், கோயமுத்தூர் அவர்கள் பாரதி ஏர்டெல் நிறுவனத்திற்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அந்த கடிதத்தில் மொபைல் எண்.9894366666 என்ற மொபைல் எண்ணிற்காக அழைப்பு கட்டணமாக செலுத்தியுள்ள கட்டண விவரங்கள் குறித்து

கோரியுள்ளார்கள். மேற்படி மொபைல் எண் இயக்க ஆரம்பிக்கப்பட்ட தேதியான 7.1.2005 ஆம் தேதியிலிருந்து 31.3.2010 ஆம் தேதி வரை செலுத்தப்பட்டுள்ள கட்டண விவரங்கள் குறித்து கேட்கப்பட்டிருந்தது. மேற்படி மொபைல் எண் 9894366666 என்பது முன்னாள் அமைச்சர் திரு.என்.பழனிசாமி அவர்கள் பெயரில் உள்ளது. 24.5.2006 முதல் 27.3.2010 ஆம் வருடம் வரை மேற்படி மொபைல் எண்ணிற்கு செலுத்தியுள்ள கட்டண விவரங்களை பாரதி ஏர்டெல் நிறுவனம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவிற்கு அனுப்பியுள்ளார்கள். மேற்படி காலக்கட்டத்தில் செலுத்தப்பட்டுள்ள பயன்பாட்டு கட்டணத் தொகை ரூ.2,28,715.77 ஆகும். காணிப்பிக்கப்படும் ஆவணம் பாரதி ஏர்டெல் அலுவலகத்தில் அப்போது பணிபுரிந்த நோடல் ஆபீசர் ஜான்சன் என்பவரால் கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எங்கள் நிறுவனத்திற்கு கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.96 ஆகும். அ.த.சா.ஆ.96 ன் அடிப்படையில் எங்கள் நிறுவனத்தின் நோடல் ஆபீசர் ஜான்சன் அவர்கள் கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய கடிதம் அ.த.சா.ஆ.97. அ.த.சா.ஆ.97 உடன் பயன்பாட்டுக் கட்டண விவரங்கள் நான்கு பக்கங்களில் அனுப்பப்பட்டுள்ளது. அது அ.த.சா.ஆ.98 ஆகும்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாரதி ஏர்டெல் நிறுவனத்தின் மேலாளராக அ.த.சா.ஆ.**96** கடிதத்தை அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.**96** னை நான் முதன்முதலாக நீதிமன்றத்தில்தான் பார்க்கிறேனா என்றால் இல்லை, எனது அலுவலகத்திலேயே அ.த.சா.ஆ.**96** ன் நகலை பார்த்துவிட்டுத்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வேண்டுகோள் கடிதத்தில் கண்ட மொபைல் எண் இயக்க ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து **31.3.2010** வரைக்கான பயன்பாட்டுக் கட்டணங்களை அளிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. மேற்படி அ.த.சா.ஆ.**96** கடிதத்திதற்கு பதிலை நோடல் ஆபீசர் ஜான்சன் அனுப்பியுள்ளார். **Date of Activation** என்பது **7.1.2005** என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மொபைல் எண் **Post paid** மொபைல் எண் ஆகும். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் ஜான்சன் என்ன வாக்கு மூலம்

அளித்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான்**. 24.5.2006** ஆம் தேதியிலிருந்து **27.3.2010** ஆம் தேதி வரைக்குமான கட்டண விவரங்களை அளித்துள்ளார்**.**

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/டேவிட் ஜோசப் பால்ராஜ்